SL & Y 02

# சடங்கும் ஆரோக்கியமும், தமிழர் வாழ்கைவட்டச் சடங்குகள் அடிப்படையிலான இனவரைவியல்

ஸ்ரீகாந்தன், ச.
*சமூகவியல் திணைக்களம், கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்*
*srikanthan80@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது தமிழர் வாழ்வியல் சடங்குகளின் வழியாகக் கட்டமைக்கப்படும் ஆரோக்கிய பராமரிப்புத் தொடர்பாக இனவரைவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றது. ஒவ்வொருவரும் பிறந்தது முதல் இறப்பு வரையான காலப்பகுதியில் பல்வேறுபட்ட சடங்குகளுக்கு உட்படுத்தபட்டு மற்றும் உட்பட்டு வருகின்றனர். உலகில் உள்ள அனைத்துச் சமூகங்களிலும் நடைமுறையிலுள்ள சடங்கு அல்லது சடங்கு நிகழ்வுகளில் ஒன்றாக வாழ்க்கைவட்டச் சடங்குகள் காணப்படுகின்றன. சமூக ரீதியாகவோ சமய ரீதியாகவோ ஒரு தனியனுடைய அந்தஸ்தினை இன்னொரு நிலைக்கு மாற்றுகின்ற சடங்குகள் அனைத்தினையும் வாழ்க்கைவட்டச் சடங்குகள் என்பர். திருமணம் முதலாக குழந்தை பிறப்பு, பருவமடைதல் மற்றும் இறப்பு வரையாக இடம்பெறும் அனைத்துச் சடங்குகளும் வாழ்க்கைவட்டச் சடங்குகள் என்பர். தனி நபரின் வாழ்க்கையின் ஒரு கட்டத்தை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்துகின்ற இச்சடங்குகளை வாழ்வியல் சடங்குகள் அல்லது வாழ்க்கை நெருக்கடிச் சடங்குகள் என்பர். வாழ்க்கைவட்டச் சடங்குகள் பண்பாட்டு தனித்துவமிக்கன. தமிழர் பண்பாட்டில் எண்ணற்ற வாழ்க்கைவட்டச் சடங்குகள் தனிமனிதனின் உடற்கூற்றியல் மற்றும் சமூக அந்தஸ்து ரீதியான நிலை மாற்றத்தினை சமூக-பண்பாட்டு வயப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வானது யாழ்ப்பாணத்து தமிழர் பண்பாட்டில் நிலவும் வாழ்க்கைவட்டச் சடங்குகளில் ஒன்றான பருவமடைதலுடன் தொடர்புடைய சடங்குகளுக்கும் ஆரோக்கியத்திற்கும் இடையிலான தொடர்பினை இனவரைவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றது. குறிப்பிட்ட மக்களின் வாழ்வியல் அனுபவங்களை விவரிப்புச் செய்வதில் இனவரைவியல் சிறந்த ஆய்வு அணுகுமுறையாகும். ஆய்வுக்கான தரவுகள் யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களாய்வின் வழியாகச் சேகரிக்கப்பட்டது. பருவமடைதல் என்பது பெண்பிள்ளைகளின் வாழ்வில் ஏற்படுகின்ற உடல் உயிரியல் ரீதியான மாற்றமாகும். பருவமடைதலுடன் தொடர்ந்து வருகின்ற காலப்பகுதி பெண்பிள்ளைகளின் உடல் -

உள ஆரோக்கிய கவனிப்பினை வேண்டி நிற்கின்றது. பருவமடைதல் என்பது பெண்ணினுடைய கர்ப்பப்பை, மனவெழுச்சி சார்ந்த ஆரோக்கியத்துடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. தமிழர் பண்பாட்டில் பெண் பருவமடைதலை பூப்படைதல், சாமத்தியப்படல், பெரியபிள்ளையாகிவிட்டாள் போன்ற வேறுபட்ட சொற்பதங்களின் வழியாக குறிப்பிடுவர். பூப்படைந்த பெண்ணின் உடல் உள ஆரோக்கியத்தினைப் பேணுகின்ற சடங்கியல் உணவுகளையும சமூக ஆதரவு-களையும் உளவழி ஆற்றுப்படுத்தல்களையும் பாரம்பரிய சடங்கியல் நடைமுறைகளின் வழியாக தமிழர்கள் மேற்கொண்டுவருகின்றனர். பருவமடைந்த காலப்பகுயில் இடம் பெறுகின்ற சடங்குசார் நடைமுறைகளின் பகுதிகளாக பெண்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகள், குடும்ப பராமரிப்புகள் மற்றும் கொண்டாட்டங்களை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கின்றது. தமிழ் பண்பாட்டில் பூப்புக் காலச் சடங்குகளின் வழியாக பருவமடைந்த பெண்ணின் உடல் - உள – சமூக ஆரோக்கியங்கள் பேணிப் பாதுகாக்கும் சடங்கியல் நடைமுறைகளை இனவரைவியல் நோக்கில் இவ்வாய்வு விவரிப்புச் செய்துள்ளது. பருவமடைந்த காலத்தில் வழங்கப்படும் சடங்கியல் உணவுகள் பெண்ணின் கருவள ஆரோக்கியத்திற்கு முதன்மையான பங்களிப்பினை வழங்குகின்றது. மேலும் அதனோடிணைந்து இடம்பெறும் சடங்குகள் பூப்புக் காலத்தில் ஏற்படுகின்ற மனவெழுச்சிசார்ந்த சிக்கல்களை நீக்கி அவர்களின் உள ஆரோக்கியத்திற்கு வழிவகை செய்கின்றது. பருவமடைந்த பெண்ணிற்குச் செய்யப்படுகின்ற கொண்டாட்டம் குடும்ப மற்றும் சமூக ஒற்றுமையினை மீள்சீரமைப்பதுடன் அவற்றிற்கு புத்துணர்ச்சியினையும் வழங்குகின்றது. இந்நிலையில் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாகக் காணப்படும் வாழ்க்கைவட்டச் சடங்குகள் தமிழர் பண்பாட்டின் தனிமனித மற்றும் சமூக ஆரோக்கியத்தின் அடிப்படை களாக இருந்துவருகின்றமை இங்கு கவனிக்கதக்கது.

திறவுச் சொற்கள் : ஆரோக்கியம், இனவரைவியல், பூப்புக்காலச் சடங்கு